අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## புள்ளியிடும் திட்டம்



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு**

| 22 | T | I |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

## தமிழ் மொழியும் இலக்கியமும் - I

## பகுதி I - விடைகள்

| வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 2 | 21. | 1 | 31. | 2 |
| 02. | 1 | 12. | 4 | 22. | 4 | 32. | 4 |
| 03. | 3 | 13. | 4 | 23. | 3 | 33. | 1 |
| 04. | 4 | 14. | 1 | 24. | 2 | 34. | 3 |
| 05. | 3 | 15. | 3 | 25. | 3 | 35. | 4 |
| 06. | 2 | 16. | 2 | 26. | 1 | 36. | 2 |
| 07. | 4 | 17. | 3 | 27. | 2 | 37. | 3 |
| 08. | 1 | 18. | 4 | 28. | 3 | 38. | 1 |
| 09. | 1 | 19. | 1 | 29. | 4 | 39. | 2 |
| 10. | 3 | 20. | 2 | 30. | 3 | 40. | 4 |

**(01 x 40 = 40 புள்ளிகள்)**

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 22 | T | II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் - II**

**பகுதி II - விடைகள்**

*1.*

(i) அறம் + தானே + என்கின்ற + அயல் + நின்றாள் + தனை + நோக்கி

(ii) பெயர் - சிறுவர்கள் கடற்கரையில் விளையாடினார்கள்
வினை - உப்பு நீரிற் கரைந்தது
(இவை போன்ற பொருத்தமான வாக்கியங்கள்)

(iii) "ஏன் மோனே, நீ உன்ரை மச்சாளிடம் பேசிறாயில்லையாம்?"

(iv) அருமந்த

(v) முன்னொட்டு - அவமானம்
பின்னொட்டு - பார்வையாளன்

(vi) அறிவித்தல் - நாளை பெருமழையும், புயற்காற்றும், கடற்கொந்தளிப்பும் ஏற்படலாம்
அறிவுறுத்தல் - மீனவர்களும், கடல்சார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுபவர்களும் பாதுகாப்பான இடத்தை அண்மித்ததாகத் தமது பணிகளில் ஈடுபடவேண்டும்.

(vii) என்னை, மாணவர்கள்

(viii) காடுகள் யானைகளால் அழிக்கப்பட்டன /
யானைகளால் காடுகள் அழிக்கப்பட்டன.

(ix) எழுவாய் - ஒளி / திண்மையொளி
பயனிலை - வெளிவந்தது

(x) வயது சென்ற ஒரு கிழவன் வீதியில் நின்றான்.

**(02 x 10 = 20 புள்ளிகள்)**

*2.*

(i) தலைப்பு –
வெளிநாட்டுப்பயணத்தின் விளைவுகள்

- வெளிநாடு செல்வதற்கான சூழ்நிலை.
- வெளிநாடு செல்பவர்களின் தொகையும், வகையும்
- வெளிநாட்டுப் பயணத்தால் ஏற்படும் அனுகூலம்
- வெளிநாடு செல்வதால் ஏற்படும் பிரதிகூலங்கள்

(ii)

- ♦ உரையாடலுக்குரிய அமைப்பினைப் பின்பற்ற வேண்டும்.
- ♦ சிறுசிறு வாக்கியங்களில் விடயத்தைத் தொடர்புபடுத்த வேண்டும்.
- ♦ பிரதான விடயத்துடன் உரையாடல் தொடர்புபட்டுச் செல்ல வேண்டும்.
- ♦ நன்மைகள் பற்றியும், தீமைகள் பற்றியும் விவாதித்து நிறுவும் பாங்கில் உரையாடல் அமைய வேண்டும்.
- ♦ உடன்பட்ட உரையாடல் நிகழ்த்தாது விவாதித்துப் பேச வேண்டும்.

(iii) மாதிரித் தலைப்புகள் –

ஆரோக்கியமான வாழ்விற்கு அவசியமானவை

ஆரோக்கியமும் வாழ்வியல் முறையும்

மனித வாழ்வும் ஆரோக்கியமும்

- அறிமுகம்
  - * மனித வாழ்விற்கு ஆரோக்கியத்தின் முக்கியத்துவம்
- ஆரோக்கியத்திற்கான உணவுப் பழக்கவழக்கங்கள்
- உடற் பயிற்சிகள் மேற்கொள்ளல்
- தியானம் செய்தல்
- விளையாட்டுக்கள்
- சிறந்த பொழுதுபோக்குகள்
- ஆரோக்கியம் பேணாமையின் தீமைகள்
- ஆரோக்கியம் பேணுவதன் அவசியத்தை வலியுறுத்தல்
- குறிப்பாக மேடைப்பேச்சு வடிவத்தைப் பேணி எழுதுதல் அவசியமானதாகும்.

(iv)

- ♦ சிறுகதை அமைப்புப் பேணப்படவேண்டும்.
- ♦ வழங்கப்பட்ட குறிப்புக்களுக்கமைவாகக் கற்பனை நயத்துடன் எழுதுதல்.
- ♦ சுவைபடவும், விறுவிறுப்பாகவும், ஐதார்த்தப் போக்கிலும் நகர்த்திச் செல்தல்.
- ♦ இயல்பானதும், கவர்ச்சியானதுமான கதையோட்டம் இருத்தல்.
- ♦ கதைக்குப் பொருத்தமான மொழிநடையைக் கையாளல்.
- ♦ படிப்பினையை மறைமுகமாக முன்வைத்தல்.
- ♦ பொருத்தமான முடிவு

| | | |
|---|---|---|
| **பொருளமைவும் அளவும்** | - | **12 புள்ளிகள்** |
| **கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும்** | - | **06 புள்ளிகள்** |
| **எழுத்து நட்பங்கள்** | - | **05 புள்ளிகள்** |
| **தலையங்கம்** | - | **02 புள்ளிகள்** |
| **மொத்தம்** | – | **25 புள்ளிகள்** |

3. சுருக்கக் குறிப்புக்கள் :

⇒ வாழ்க்கையின் முதற்படி ஊண், உடை, உறையுள் முதலியவற்றை கடின உழைப்பினால் தேடிப் பெறுவதாகும்.

⇒ இவற்றை நிறைவு செய்வோரே இரண்டாம் படிநிலையான கலை வாழ்வை எய்துவார்.

⇒ வறுமையில் தொடர்ந்து வாடுவோரால் இரண்டாம் படிநிலையை எய்தமுடியாது.

⇒ வறுமை அற்ற நிலையிலே புலன்களுக்கு விருந்தளிக்கும் கலைகளைத் தேடி அவற்றின் வாயிலாக இன்பம் அனுபவிக்க முயல்வர்.

⇒ கலை வளர்ச்சியே மக்கள் வாழ்க்கையாக அமைகிறது.

**விடயம் – 06 புள்ளிகள்**
**சொல்லளவு – 02 புள்ளிகள்**
**மொழி – 02 புள்ளிகள்**

**(6 + 2 + 2 = 10 புள்ளிகள்)**

4.

(அ) பிறர் உதவியின்றி எதையும் சாதிப்பது இயலாதது என்பதால்

(ஆ) பிறருடன் சேர்ந்து வாழ்வது மனித இயல்பாக இருப்பதால்

(இ) நாடோடிச் சீவியம் நீங்கிய போது

(ஈ) ஒரு தொழிலில் ஈடுபட்டவர்கள் தமது நிலையை உயர்த்திக் கொள்வதற்காக வேறு தொழிலில் ஈடுபடக் கூடாது என்ற போது

(உ) கமக்காரர், இடையர், தச்சர், கம்மாளர்

**(02 x 05 = 10 புள்ளிகள்)**

5.

**கடிதம்**

**அமைப்பு**

| | |
|---|---|
| முகவரி | - 01 புள்ளிகள் |
| உள்முகவரி | - 01 புள்ளிகள் |
| விளிப்பு | - 01 புள்ளிகள் |
| தலைப்பு | - 01 புள்ளிகள் |
| பதவி, ஒப்பம் | - 01 புள்ளிகள் |
| | **05 புள்ளிகள்** |

| | |
|---|---|
| **உள்ளடக்கம்** | **- 07 புள்ளிகள்** |
| **மொழிநடை** | **- 03 புள்ளிகள்** |
| **மொத்தம்** | **- 15 புள்ளிகள்** |

♦ உள்ளடக்கம்
- விலைவாசி உயர்வுக்கான காரணங்கள்
- மக்களின் அன்றாட வாழ்வின் பாதிப்பு
- மாணவர் சமூகத்தைப் பாதித்த விதம்
- காலையுணவின்றிப் பாடசாலை செல்தல்
- கற்றலில் கவனஞ்செலுத்த முடியாதிருத்தல்
- கற்றலில் தொடர்ந்து ஈடுபட முடியாதிருத்தல்
- எப்பொழுதும் சோர்வாக இருத்தல்
- இடை விலகுதல்
- கல்வியிலிருந்து விலகி வேலைக்குச் செல்தல்

♦ மொழிநடை
- பொருத்தமான மொழிநடை
- குறியீடுகள்
- வழுக்கள் அற்றதாக இருத்தல்
- சுட்டிப்பாக எழுதப்பட்டிருத்தல்

**அல்லது**

**துண்டுப்பிரசுரம்**

**அமைப்பு**

| | |
|---|---|
| கவர்ச்சிகரமான தலைப்பு | - 02 புள்ளிகள் |
| விளிப்பு | - 01 புள்ளிகள் |
| வெளியிடுபவர் பற்றிய விபரம் | - 02 புள்ளிகள் |
| | **05 புள்ளிகள்** |
| **உள்ளடக்கம்** | **- 07 புள்ளிகள்** |
| **மொழிநடை** | **- 03 புள்ளிகள்** |
| **மொத்தம்** | **- 15 புள்ளிகள்** |

♦ உள்ளடக்கம்
- போதைப்பொருள் பாவனை பற்றிய கருத்து
- போதைப்பொருள் வடிவங்கள்
- இளைஞர் சமூகத்தில் பரவும் விதம
- அதனால் ஏற்படும் பாதிப்புகள்
- சமூகத்தின் பார்வைகள்
- நோய் நிலைமைகள்
- குடும்பப் பொருளாதரம் சீர்கெடல்
- இளைஞர் சமுதாயத்தை இக் கொடிய பழக்கத்திலிருந்து விடுபட வைப்பதற்கான முன்மொழிவுகள்
- மருத்துவ ஆலோசனைகள்

♦ மொழிநடை
- கவர்ச்சியான மொழிநடை
- வாசகர்களை விளித்து எழுதப்படல்
- சொற்செறிவு கொண்டிருத்தல்

✳✳✳

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு**

| 22 | T | III |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

## தமிழ் மொழியும் இலக்கியமும் - III

## பகுதி III - விடைகள்

*1.*

(i) *(அ)* ஆண் சிங்கம்

*(ஆ)* மடக்கு அணி

(ii) *(அ)* தருமன், வீமன், அருச்சுணன், நகுலன், சகாதேவன்

*(ஆ)* கிருஷ்ணன்

(iii) *(அ)* தேசபக்தர் வரவினைக் காத்து நிற்கும் சாரர்கள் / படைவீரர்கள்

*(ஆ)* சிறப்பு

(iv) *(அ)* தாம்மட்டும் / தனித்து, தனிய

*(ஆ)* இறப்பை நீக்குவது / சாவிலிருந்தும் காப்பது

(v) *(அ)* தொல்காப்பியம்

*(ஆ)* அகத்திணையியல்

(vi) *(அ)* நினைந்தழுதல்

*(ஆ)* அரபுமொழிச் சொல்

(vii) *(அ)* மிகுதியான நீர் / ஆழமான நீர்

*(ஆ)* ஆராய்ந்து பார்க்காத இளமைக் காலம்

(viii) *(அ)* உதிரிப்பூக்கள்

*(ஆ)* ஜெ.மகேந்திரன்

(ix) *(அ)* ஊரன்

*(ஆ)* தோழி கூற்று

(x) *(அ)* துன்பம்

*(ஆ)* பிரிவின் கண் பீழை தருவது ஒன்று இல்
பேதையார் கேண்மை பெரிது இனிது

**(02 x 10 = 20 புள்ளிகள்)**

*2.*

(i) *(அ)* துரியோதனனாதியாரும் தாமும் குருநாட்டில் சமாதானமாக வாழ்வதற்குக் கிருஷ்ணன் தூது செல்ல வேண்டும் என்பதாகும்.

*(ஆ)* வேறுபட்ட இயல்புடைய இரு தாவரங்கள் ஒரே நீர் நிலையில் ஒற்றுமையாக வாழ்கின்ற போது ஒரு குலத்தில் பிறந்த தாம் குரு நாட்டில் ஒற்றுமையாக வாழலாம் என்பது

(ii) *(அ)* சீனத்துச் செப்பு, சிங்காரப் பூ நிலவு போன்ற சித்திரிப்புகள் மூலம்

*(ஆ)* "ஓதிப்படிச்சி ஊர்புகழ வாழ்ந்தாலும்
ஏழைக்குச் செய் தீங்கை அல்லா - எள்ளளவும் ஏற்கமாட்டான்."
என்ற கூற்றின் மூலம்

(iii) *(அ)* "பூத்த ஜோதி வதனம் திரும்புமேல்
புலன் அழிந்தொரு புத்துயிரெய்துவேன்"

*(ஆ)* உவமை அணி
உவமானம் - தேரின் சக்கரத்தைப் பற்றிச் செல்லும் கொம்பில்லாத சிறு விலங்கு
உவமேயம் - காதலியைப் பற்றிச் செல்லும் பாரதியின் மனது
பொதுத்தன்மை - தொடர்ந்து செல்லுதல்

(iv) *(அ)* பொறாமை, எரிச்சல், அதிருப்தி, பொறுமையின்மை

*(ஆ)* காட்சிப் படிமங்கள் மூலம் கதை சொல்லக்கூடிய ஒன்றை வார்த்தை மூலம் கூற முயன்றால்

(v) *(அ)* உலகநீதி நூல்களைச் சிறப்பாக ஆராய்ந்து அரும்பெரும் நூல்களை இயற்றியவர்

*(ஆ)* திருக்குறளை அவர் ஜேர்மன் மொழியில் படித்தமையாகும்.

**(04 x 05 = 20 புள்ளிகள்)**

*3.*

*(அ)*

* அரிச்சந்திரன் - நாட்டை இழந்து பெற்ற மகனை இழந்து சேர்த்த செல்வங்கள் அனைத்தையும் இழந்து இறுதியில் இழக்கக் கூடாதெனக் கருதுகின்ற புண்ணியப் பயனை இழந்தாலும் சத்தியத்தை இழக்க மாட்டேன் என்கிறான்.
* மகாத்மாகாந்தி - இந்தியாவும் பெரிதன்று, உடலமும் பெரிதென்று, உயிரும் பெரிதன்று சத்தியமே பெரிதாயிற்றே.
* தசரதன் - நிலைமாறும் தன்மையுள்ள அரசியற் கொள்கையைக் கைவிடுவேன், நிலைமாறாத இயல்புள்ள சத்திய வாக்கைக் கடைப்பிடிப்பேன்.

*(ஆ)* நிலத்தை விடப் பெரியது, ஆகாயத்தையும் விட உயரமானது, சமுத்திரத்தினுடைய ஆழத்தையும் விட ஆழமானது எனக் காதல் இலட்சியம் காட்டப்பட்டுள்ளது.

**(08 + 07 = 15 புள்ளிகள்)**

***அல்லது***

(அ) சினிமா மொழி காட்சிப் படிமம், ஒலி, படத்தொகுப்பு எனும் மூன்று அம்சங்களால் ஆனது.

காட்சிப் படிமத்திற்கு எடுத்துக் காட்டாக பாலுமகேந்திராவின் அழியாத கோலங்கள் படத்தில் ஒரு காட்சித் தொடர்; வாய்க்கால் ஒன்றில் சிறுவர்கள் நீந்தி விளையாடுவது, அதிலொருவன் மூழ்கி இறப்பது, கிராமத்து மக்களின் வருத்தம், அதிர்ச்சி, சிறுவனின் ஈமக்கிரிகைகள் எல்லாமே அழுத்தமான, அழகான, வரிசையான காட்சிப் படிமங்களால் வெளிப்படுத்தப்படுகின்றன.

காட்சிப் படிமங்களுக்குத் தாங்கலாக வருவது ஒலி, இதற்கு எடுத்துக் காட்டாக பாரதிராஜாவின் கல்லுக்குள் ஈரம் படத்தில் சலவைத் தொழிலாளி ஒருவன் குடித்துவிட்டு ஆடும் போது அவரை அடையாளப்படுத்தும் கிராமியப் பாடலின் இசை.

சினிமா இலக்கணத்திற்கு அடித்தளம் படத்தொகுப்பு எப்படி இந்தக் கோர்வை அமைகிறதோ அதற்கேற்ப அதன் அர்த்தமும் மாறுபடும். எடுத்துக் காட்டாக வருத்தம் தோய்ந்த ஒரு மனிதமுகம் ஒரு தட்டிலே கோழிவறுவல் புன்சிரிப்புடன் அந்த மனித முகம். — இது பசியுடன் இருக்கும் ஒரு மனிதனுக்கு கோழி கிடைப்பதில் மகிழ்ச்சி. வேறோரு கோணத்தில் இணைத்தால் மகிழ்சியான முகம், தட்டில் கோழிவறுவல், வருத்தமான முகம் — இது உணவை எதிர்பார்த்த ஒருவருக்குக் கோழி வந்ததில் வருத்தம்.

(ஆ)

* சினிமா நாடகத்திற்கு அடிமைப்பட்டிருந்தமை.
* அண்மைக்காலம் வரை இயக்குனர்கள், நடிகர்கள், வசன கர்த்தாக்கள், பாடலாசிரியர்கள் யாவரும் நாடகத் துறையிலிருந்து வந்தவர்கள்.
* வாய்ப்பேச்சால் கதை சொல்ல முற்படுதல்.
* ஒலிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தமை.
* சினிமா மொழியைப்பற்றித் தெளிவான அறிவில்லாமை.
* சினிமா மொழியை, சினிமாவில் கையாள வேண்டிய குறியீடுகளைச் சரியாகப் பயன்படுத்தாமை.

**(08 + 07 = 15 புள்ளிகள்)**

4.

(அ)

* எருமைகள் நிறைந்துள்ள நாடு
* பால்வளம் பெருகிய நாடு
* மூவகைக் கனிகளும் நிரம்பிய நாடு
* மழைவளம் பொருந்திய நாடு
* மூன்று போகங்களும் விளைவுள்ள நாடு
* மூவகைச் சிறப்புகளும் நடைபெறும் நாடு
* தெய்வீகத் தன்மை பொருந்திய நாடு
* பாவங்கள் நீங்கும் நாடு
* வயல்கள், கரும்புகள் நிறைந்துள்ள நாடு
* பெண்கள் செழிப்புற்று விளங்கக் காணும் நாடு

(ஆ)

* வளைந்த இளம் பிறைச்சந்திரனைத் தம் சடையிலே முடிந்திருக்கும் அழகினை உடையவர்.
* அருளைக் கொடையாக வழங்குபவர், மகராசர்.
* குறும்பலா மரத்தடியில் கோயில் கொண்டிருக்கும் ஈசர்.
* நாத தத்துவத்தின் மெய்ப்பொருளாகிய அரி, அயன், அரசன் எனும் மூன்றுருவாகவும் விளங்குபவர்.
* மங்கலமான பேரிகைகளின் ஒலிகேட்கும் ஈசர்

**(08 + 07 = 15 புள்ளிகள்)**

**அல்லது**

(அ)

* பெண்கள் கல்வி கற்க முடியாதநிலை
* பெண்களைச் சுதந்திரமில்லாமல் வீட்டில் அடைத்து வைத்திருக்கும் நிலை
* பூட்டித் திறந்தெடுக்கும் பொருளாகப் பெண்களைக் கருதியமை
* திருமண விடயத்தில் பெண்ணின் விருப்பிற்கு இடமில்லை
* பெண்ணை முன்பின் தெரியாத விருப்பமில்லாத ஆடவனுக்குக் கட்டிக் கொடுத்தல்
* மூடருக்கும், பேடருக்கும், முதியோர், மெலியோருக்கும் பெண்ணைக் கட்டிக் கொடுத்தல்
* பெண்களுக்கும் அடிமைகளுக்கும் வேறுபாடு இல்லை என்ற கோட்பாட்டைக் கொண்டிருத்தல்.

(ஆ)

* மான் போன்ற அழகிய விழிகளை உடையவள்
* வஞ்சிக் கொடி போன்ற இடையை உடையவள்
* செந்தாமரை போன்ற ஒளியுடைய விழி உடையவள்
* அன்னம் போன்ற நடையை உடையவள்
* மை பூசப்பட்ட விழிகளை உடையவள்
* அழகிய பூங்கொம்பு போன்ற உடலினை உடையவள்
* தன் இதயத்தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமி / பெண்ணரசி
* பசுமையான மாலையணிந்த கூந்தலை உடையவள்

**(08 + 07 = 15 புள்ளிகள்)**

5.

(அ)

* புழுதிப்படுக்கையிலே அவர்கள் வாழ்வு புதைந்து போகிறது.
* ஊனையும் உடலையும் ஊட்டி இம்மண்ணை உயிர்ப்பித்தவர்களுக்கு அன்பு செலுத்துவார் யாருமில்லை.
* அவர்களின் புதைமேட்டில் காட்டுப் பூவைக் கூடப் பறித்துப்போடும் நிலை இல்லை.
* ஆழமாகப் புதையுண்ட தேயிலைச் செடியின் அடியிற் புதைக்கப்பட்ட தந்தையின் சிதைமேல் ஏழை மகன் ஏறிமிதித்துச் சென்று வேலை செய்தால்த்தான் உயிர்வாழும் நிலை.

(ஆ)

"என்னே மனிதர்

இவரே இறந்தார்க்கு

இங்கோர் கல்லறை

எடுத்திலர்! வெட்கம் ..."

என்ற கூற்று மூலம் மனிதர்கள் மீதான கவிஞரின் வெறுப்பை அறிய முடிகிறது.

**(05 + 05 = 10 புள்ளிகள்)**

*6.*

*(அ)*

* மேகலா வீட்டுக் கணக்குகளையும் சீட்டுக் கணக்குகளையும் கணிப்பொறியில் செய்யத் தொடங்கினாள்.
* அரவிந்தன் படங்கள் கீறவும், கேம்ஸ் விளையாடவும் தொடங்கினான்.
* அரவிந்தனின் நண்பர்கள் அடிக்கடி அரவிந்தன் வீட்டிற்கு வந்து போகத் தொடங்கினார்கள்.
* புதிதாகப் பிறந்துவிட்ட குழந்தை வீட்டையே அடியோடு மாற்றுவது போல ஒரு மாற்றம் ஏற்பட்டது.
* அவர்கள் கம்பியூட்டர் பாசையிலேயே உரையாடத் தொடங்கினார்கள்.
* அவர்கள் வீடு ஒரு விஞ்ஞானத் துள்ளல் துள்ளி முன்னேறிக் கொண்டிருந்தது.

*(ஆ)*

* சந்தி பிரிக்காத பாடல் போல
* சிவக்கொழுந்து 1008 வேட்டி வாங்க வண்டில் கட்டி பெரிய கடைக்குப் போனதைப்போல
* நிறை பொங்கல்ப் பானையை இறக்குவது போல
* புதிதாகப் பிறந்த குழந்தை வீட்டை அடியோடு மாற்றுவது போல
* புகையிலைக் கன்றுக்குப் பாத்தி கட்டுவது போல
* நல்ல பாம்பை உசுப்பிவிடுவது போல
* அவசரத்தில் இழுத்த ஸிப் போல
* நீத்துப் பூசணிக்காய் போல
* பெற்றோரை ஏமாத்தி களவாய் ஓடிவந்த காதலியைக் கண்டது போல
* மீன் குஞ்சு நீந்துவது போல
* முட்டியில் கள்ளுப் பொங்குவது போல

**(05 + 05 = 10 புள்ளிகள்)**

*7.*

*(அ)*

* மணலில் வண்டல் பாவை செய்தல்
* பறித்த மலர்களை வண்டல்ப் பாவைக்குச் சூட்டி அழகு பார்த்தல்
* பொய்கையில் மகிழ்ந்து நீராடுதல்
* ஒளிவு மறைவு அற்ற நண்பர் கூட்டத்தோடு கைபிணைந்து ஒத்திசைவாக விளையாடுதல்
* மருத மரத்தின் உச்சியிலே ஏறி ஆழமான நீர் மடுவத்தினுள் குதித்தல்

*(ஆ)*

* பூண் பூட்டிய ஊன்று கோலை ஊன்றி நடத்தல்
* நடுங்குதல்
* இருமலினிடையே சில வார்த்தைகளை மட்டும் பேசக் கூடியதாக இருத்தல்
* இளமைக்கால நினைவுகளை மனதிலே எண்ணி அது இனிக் கிடைக்காதே என வருந்துதல்

**(05 + 05 = 10 புள்ளிகள்)**

***